[23rd March 1964

(3) **உணவுத் தானியங்கள்.**—1955-ம் ஆண்டு அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ், வெளியிடப்பட்ட, 1958-ம் ஆண்டு, சென்னை, உணவுத் தானிய விற்பனையாளர்கள் லைசென்ஸ் ஆணையின்கீழ் கொடுக்கப்பட்ட லைசென்சுகளின் 7-வது நிபந்தனையின்படி இவ்வியாபாரிகள் விலைப்பட்டியலைப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்க வேண்டும்.

(4) **மண் எண்ணெய்.**—இந்திய அரசாங்கம் வெளியிட்ட மண்ணெண்ணெய் (விலைக் கட்டுப்பாடு) ஆணை, 1963-ன்படி, மண்ணெண்ணெய் வியாபாரி ஒவ்வொருவரும் தங்கள் கடையிலோ அல்லது கடைக்கருகிலோ கீழ்க்கண்ட விவரங்களைக் காட்டும் தனிப் பலகையொன்றை மாட்டி வைக்க வேண்டும் :

(அ) விற்பனைக்காக அவர் அவ்வப்போது இருப்பில் வைத்துவரும் மண்ணெண்ணெய் ரகங்கள்.

(இ) ஒவ்வொரு ரகத்தின் தற்போதைய விலைவிவரம்.

(உ) ஒவ்வொரு ரக மண்ணெண்ணெயின் விற்பனை விலை.

(5) **சலவை சோப்பு, அச்சடிக்கும் காகிதம், எழுதும் காகிதம்.**—இந்திய அரசாங்கம் 1963-ல் வெளியிட்ட அத்தியாவசியப் பொருள்கள் (விலைக் கட்டுப்பாடு) ஆணையின்படி சலவை சோப்பு, அச்சடிக்கும் காகிதம், எழுதும் காகிதம் இவற்றில் வியாபாரம் செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் தம் கடையில் அல்லது கடைவாயிலில் இவற்றின் முந்திய விலையையும், தற்போதைய விலையையும் காட்டும் பலகை ஒன்றைக் காட்டி வைக்க வேண்டும்.

APPENDIX IV.

[*Vide* answer to Starred Question No. 375 on page 15 supra.]

A.—The profits for 1960–61 were less than the profits for 1959-60 by Rs. 2·98 lakhs because there was increase in the following items of expenditure not related to the increase in fleet strength:—

(*a*) Depreciation on buses on account of increase in rates of depreciation from 16-2/3 per cent to 20 per cent ;

(*b*) Implementing the recommendations of Pay Commission from 1st June 1960 increasing emoluments of staff ;

(*c*) Increase in cost of diesel oil.

The increased earnings in 1960-61 offset these items of expenditure to the extent of Rs. 7·50 lakhs, resulting in a reduction of Rs. 2·98 lakhs only.

The profits for 1961–62 were lower than those for 1960–61 by Rs. 2·64 lakhs because there was increase in the following special items of expenditure which were not related to fleet strength:—

(*a*) Spare parts issued for maintenance and repairs ;

(*b*) Cost of annual overhauls done in Chromepet Workshop.

23rd March 1964]

During 1961-62 the number of annual overhauls completed was 283 as against 206 in 1960-61. This accounts for an increase of Rs. 7 lakhs in 1961-62. The number of annual overhaul done is not up to the number normally expected based on the fleet strength of the department and gradually the arrears in annual overhauls are being overtaken. The increased earnings due to normal increase in fleet strength offset the special items of expenditure to the extent of Rs. 4·36 lakhs resulting in a reduction in profit of Rs. 2·64 lakhs only during 1961-62.

பதில்.—1960–61-ம் ஆண்டுக்கான லாபம், 1959–60-ம் ஆண்டைக் காட்டிலும் ரூ. 2·98 லட்சம் குறைந்திருந்தது. இதற்குக் காரணம் கீழ்க்கண்ட செலவினங்களில் அதிகரிப்பு ஏற்பட்டதுதான். இச் செலவினங்கட்கும் பஸ்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கும் சம்பந்தமில்லை:—

(அ) பஸ்களில் தேய்மானமதிப்பு விகிதம் 16-2/3 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதத்துக்கு உயர்ந்தது.

(இ) சம்பளக் கமிஷனின் சிபார்சுகளையொட்டி 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதியிலிருந்து பணியாளர்களின் சம்பளங்கள் உயர்த்தப் பட்டன.

(உ) டீசல் எண்ணெய் விலை உயர்ந்துவிட்டது.

1960–61-ல் கிடைத்த அதிக வருவாய் மேற்சொன்ன செலவினங்களால் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையில் ஈடு செய்யப்பட்டது. அதனால் அந்த ஆண்டில் லாபம் 2·98 லட்சம் ரூபாய் மட்டுமே குறைந்துவிட்டது.

1961–62-ம் ஆண்டுக்கான லாபம், 1960–61-ம் ஆண்டைக் காட்டிலும் ரூ. 2·64 லட்சம் குறைந்திருந்தது. கீழ்க்கண்ட விசேஷ செலவினங்களில் அதிகரிப்பு ஏற்பட்டதுதான் அதற்குக் காரணம். இச் செலவினங்கட்கும் பஸ்களின் எண்ணிக்கைக்கும் சம்பந்தமில்லை:—

(அ) வண்டிப் பராமரிப்புக்கும், பழுதுபார்ப்பதற்கும் பஸ் உதிரி பாகங்கள் வழங்கப்பட்டன.

(இ) குரோம்பேட்டை வொர்க்ஷாப்பில் வண்டிகளை ஆண்டுதோறும் ஓவர்ஹாலிங் செய்வதற்கான செலவு.

1960–61-ல் ஆண்டுதோறும் ஓவர்ஹாலிங் செய்த வண்டிகளின் எண்ணிக்கை 206. ஆனால் 1961–62-ல் இது 283-ஆக உயர்ந்தது. இதனால் 1961–62-ல் செலவு ரூ. 7 லட்சமாக உயர்ந்தது.

இத் துறையின் வசமுள்ள பஸ்களின் எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால், ஆண்டுதோறும் ஓவர்ஹால் செய்யப்படும் வண்டிகளின் எண்ணிக்கை சாதாரணமாக எதிர்பார்க்கப்படும் அளவை எட்டியதாகச் சொல்ல முடியாது. இதற்குமுன் வந்த வண்டிகளும் படிப்படியாக எடுத்து ஓவர்ஹாலிங் செய்யப்பட்டுவருகின்றன. பஸ்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் சாதாரணமாகக் கிடைக்கும் அதிக வருவாய் இந்த விசேஷ செலவினங்களால் 4 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் வரையில் சரிக்கட்டப்பட்டுவிட்டது. இதனால் 1961–62-ல் லாபம 2·64 லட்சம் ரூபாய் மட்டுமே குறைந்துவிட்டது.